# கற்றல் ஊக்கி - 03

பாடம் :- **வரலாறு**

தரம் :- **11**

**அறிவுறுத்தல்கள்**

- ❖ வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.
- ❖ தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

**2017 - தவணை - 02**

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி | A | B | | | |
| வினா எண் | 1 | 1 | 2 | 3 | மொத்தப் புள்ளி |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 10 | 08 | 18 | 18 | 54 |
| பெற்ற புள்ளி | | | | | |

## அலகு - 03

## பகுதி - A

❖ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த மேலைத்தேச நாட்டவர்
(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர்
(3) பிரித்தானியர் (4) பிரான்சியர்

02) யாழ்ப்பாணம் உட்பட வட பகுதிகளில் செயற்பட்ட மிஷனரி அமைப்பு
(1) லண்டன் மிஷனரி (2) பெப்டிஸ்ட் மிஷனரி
(3) சேர்ச் மிஷனரி (4) அமெரிக்கன் மிஷனரி

03) கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சிக்காக சேர்ச் மிசனரி சபையால் வெளியிடப்பட்ட வெளியீடு
(1) மாசிக்க தேக்க (2) உரகல
(3) லங்கா நிதானய (4) ஞானதீபம்

04) கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு எதிராக நடைபெற்ற விவாதங்களில் சர்வதேச ரீதியாகப் பிரசித்தி பெற்ற விவாதம்
(1) வராகொட விவாதம் (2) வத்தேகம விவாதம்
(3) உதம்மிட்ட விவாதம் (4) பாணந்துறை விவாதம்

05) பாணந்துறை விவாதத்தால் கவரப்பட்டு இலங்கைக்கு வந்து பௌத்த மதத்திற்குப் பணியாற்றிய வெளிநாட்டவர்
(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(2) டி. பீ. ஜயா
(3) ஆதர் வி. தியெஸ்
(4) வலிசிங்க ஹரிச்சந்திர

06) அனுராதபுரத்தில் உள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்து முன்னோடியாகச் செயற்பட்டவர்
(1) அநகாரிகதர்மபால
(2) பியதாஸ சிறிசேனா
(3) வலிசிங்க ஹரிச்சந்திர
(4) ஜோன். த. சில்வா

07) இந்தியாவில் உள்ள புத்தகயாவைப் பாதுகாப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்
(1) டீ. எஸ். சேனாநாயக்க
(2) ஆதர் வி. தியெஸ்
(3) அநகாரிகதர்மபால
(4) வலிசிங்க ஹரிச்சந்திர

 Copyright © Aaruthal 2017 

08) கி.பி. 1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கத்திற்கு தலைமை தாங்கிச் செயற்பட்டவர்
(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(2) அநகாரிகதர்மபால
(3) சேர் பொன் அருணாச்சலம்
(4) டீ. எஸ். சேனாநாயக்க

09) வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்த முன் நின்று பணியாற்றியவர்
(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(2) பொன்னம்பலம் அருணாசலம்
(3) வலிசிங்க ஹரிச்சந்திர
(4) அநகாரிகதர்மபால


10) இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டவர்
(1) அறிஞர் எம். சி. எம். சித்திலெப்பை
(2) டி. பீ. ஜயா
(3) மொன் கரோலிஸ் ஹேவாவிதாரன
(4) ஆதர் வி. தியெஸ்

(10 புள்ளிகள்)

## பகுதி - B

01) பின்வரும் படங்களை அவதானித்து விடை தருக.


I.



1) படத்தில் காணப்படுபவரின் பெயரைத் தருக.
.............................................................................
2) பௌத்த மறுமலர்ச்சிக்காக இவரால் உருவாக்கப்பட்ட அமைப்பு .............................................................
3) இவரின் தாய் நாடு .............................................................
4) இவர் இலங்கைக்கு வரக் காரணமான விவாதம்
.............................................................................

(4 புள்ளி)

II.



1) படத்தில் காணப்படுபவரின் பெயரைத் தருக.
.............................................................................
2) இவரின் பணியால் மறுமலர்ச்சி அடைந்த மதம்
.............................................................................
3) இவரால் வெளியிடப்பட்ட பத்திரிகை
.............................................................................
4) இவரால் அமைக்கப்பட்ட கல்லூரி
.............................................................................

(4 புள்ளி)

02)

i) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி சபைகள் இரண்டு எழுதுக.

.......................................................................................................................

.......................................................................................................................

(3 புள்ளி)

ii) மிஷனரி சபைகள் தமது சமயத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்திய மூன்று துறைகளையும் எழுதுக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(4 புள்ளி)

iii) பௌத்த மத மறுமலர்ச்சிக்கு ஒல்கொட் ஆற்றிய பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(5 புள்ளி)

iv) பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

(6 புள்ளி)

03) i) இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பணியாற்றிய இருவரைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

.................................................................................................................................

(3 புள்ளி)

ii) பின்வரும் பத்திரிகைகளை வெளியிட்டவர்களை எழுதுக.

A - உதயபானு .................................................................................

B - முஸ்லிம்நேசன் .................................................................................

(4 புள்ளி)

iii) இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு அறிஞர் சித்திலெப்பை ஆற்றிய பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(5 புள்ளி)

iv) இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(6 புள்ளி)

 Copyright © Aaruthal 2017 

## தகவல் பத்திரம்

❖ **பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட மிஷனரி அமைப்புக்கள்.**

- லண்டன் மிஷனரி சங்கம்
- பெப்டிஸ்ட் மிஷனரி சங்கம் :- கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்டது.
- வெஸ்லியன் மிஷனரி சங்கம் :- வடக்கு, கிழக்குப் பகுதி
- அமெரிக்கன் மிஷனரி சங்கம் :- யாழ்ப்பாணம் உட்பட வடக்குப் பிரதேசம்
- சேர்ச் மிஷனரி சங்கம் :- கொழும்பு, காலி, கற்பிட்டி, மன்னார், கண்டி

❖ மிஷனரி அமைப்புக்களின் வெளியீடுகள்

- சேர்ச் மிஷனரி :- மாசிக்க தேக்க
- சமய பூஸ்திகா சங்கம் :- லங்கா நிதானய
- பெப்டிஸ்ட் மிஷனரி :- உரகல

❖ மிஷனரி அமைப்புக்கள் சமயத்தைப் பரப்ப எழுத்து, சொற்பொழிவு, கல்வி ஆகிய துறைகளைப் பயன்படுத்தினர்.

❖ **பௌத்த மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் :-**

- கல்விப் பிரிவெனாக்கள் அமைத்தமை. (வலானை சித்தார்த்ததேரர் - இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா, ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலதேரர் - மாளிகாகந்தவித்தியோதயப் பிரிவெனா)
- அச்சகங்களை நிறுவியமை (சுதர்ஷண அச்சகம், சரசவி சந்தரெஸ அச்சகம்)
- பகிரங்க விவாதங்களை நடத்தியமை (ஐம்பெரும் விவாதம்)
- பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை (கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி)

❖ **பௌத்த புனித தலங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் :-**

- "வலிசிங் ஹரிச்சந்திர" அனுராதபுரத்தில் உள்ள புனித இடங்களைப் பாதுகாக்கும் இயக்கத்தை ஆரம்பித்தமை.
- "அநாகரிகதர்மபால" இந்தியாவில் உள்ள புத்தகயா போன்ற புனித இடங்களைப் பாதுகாக்க முன்வந்தமை

❖ **பௌத்த மறுமலர்ச்சிக்குப் பணியாற்றியவர்கள் :-**

- ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்
- மீகெட்டுவத்தே குணாநந்ததேரர்
- ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்

❖ **இந்து சமய மறுமலர்ச்சி**

- பிரித்தானியர் காலத்தில் இந்து சமய மறுமலர்ச்சிக்கு பணியாற்றியவர்கள் :-

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

சேர் பொன்னம்பலம் இராமநாதன்

சேர் பொன்னம்பலம் அருணாச்சலம்

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் :-
  - யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணைப் பிரதேசத்தில் அச்சகம் ஒன்றை நிறுவ வழிகாட்டியமை
  - "உதயபானு" என்ற பத்திரிகையை ஆரம்பித்தமை
  - சைவபரிபாலன சபை, இந்துக் கல்வி சபை என்பன அமைக்கப்பட்டு பாடசாலைகள் அமைக்கும் இயக்கத்தை செயற்படுத்தியமை
  - ஆங்கிலக் கல்வியை பரப்புவதற்காக யாழ் இந்துக் கல்லூரியை ஆரம்பித்தமை

- இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி
  - இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்குப் பணியாற்றியவர்கள் :- அறிஞர் எம்.சி.எம்.சித்திலெப்பை
    டி. பீ. ஜாயா
  - சித்திலெப்பை :- முஸ்லிம் நேசன் பத்திரிகை
    சாஹிராக் கல்லூரி
    முஸ்லிம் கல்விச் சபை
    "மத்ரஸா" எனும் சமயப் பாடசாலையை ஆரம்பித்தமை


Copyright © Aaruthal 2017